# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure )

**In the Court of District Munisif Cum Judicial Magistrate, Neyveli.**

**CC.No. 05 /2013**

**PW. 1/ LW 1**

| | | |
|---|---|---|
| Police Station | : | Mandharakuppam PS |

**Deposition of witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | Ravi(54) |
| Father Name/Husband Name | : | Seenivasan |
| Village | : | Chinna kappaangulam |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 04.01.2023 என்னால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**<u>மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்த மின்னல்கொடி என் மனைவி. சம்பவம் நடந்த அன்று இருசக்கர வாகனத்தில் என் மனைவி என் மச்சான் பாலமுருகன், அவருடைய மனைவில் இந்திரா ஆகியோர் வந்தார்கள். மூன்று பேர் அன்று இருசக்கர வாகனத்தில் வந்தார்கள் என்று முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. என் மனைவி சம்பவயிடத்தில் இறந்துவிட்டார், மற்ற இருவரை ஆம்பூலன்ஸில் அனுப்பிவிட்டு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். மோதிய பஸ்ஸின் ஓட்டுநர் யார் என்று நான் பார்க்கவில்லை. பஸ்ஸின் நம்பர் எனக்கு தெரியவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் அறிவழகன் பஸ்ஸை ஓட்டினார் என்று எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் அந்த நேரத்தில் வந்த வாகனம் அது தான் என்று போலிசார் கூறினார்கள். சாட்சி மீண்டும் தன்னுடைய வழக்கறிஞர் கூறியதாகவும் கூறுகிறார். எதிரிக்கு இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் நஷ்டஈடு பெறவேண்டி எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை**

கேபிஎன் டிராவல்ஸ் ஓட்டுநரை நான் ஏன் பார்க்கவில்லை என்றால் என் மனைவி இறந்து கிடக்க என் மச்சான் மற்றும் அவரின் மனைவி அடிப்பட்டு இருந்த நிலையில் நான் வேறு எதையும் பார்க்கவில்லை அந்த பேருந்தும் நிற்காமல் சென்றுவிட்டது.

/ஒம்/.(திரு.எ.பிரவின்குமார்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நெய்வேலி.

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure )

**In the Court of District Munisif Cum Judicial Magistrate, Neyveli.**

**CC.No. 05 /2013**

**PW. 2/ LW 4**

| | | |
|---|---|---|
| Police Station | : | Mandharakuppam PS |

**Deposition of witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | Rajasekar(55) |
| Father Name/Husband Name | : | Govindhasamy |
| Village | : | Chinna kappaangulam |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 04.01.2023 என்னால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

<u>**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. கேள்விபட்ட சங்கதிதான். காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். எதிரிக்கு இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் நஷ்டஈடு பெறவேண்டி எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்து அதில் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

/ஒம்/.(திரு.எ.பிரவின்குமார்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நெய்வேலி.